# ஆலந்தூர் மெட்ரோவில் இருந்து வேளச்சேரிக்கு, 'ஏசி' வேன் வசதி

சென்னை, டிச. 12–

ஆலந்தூர் மெட்ரோ நிலையத்தில் இருந்து, வேளச்சேரிக்கு, 'ஏசி' வேன் வசதி, நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில் பயணிப்போர், நிலையங்களில் இருந்து, செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக செல்ல, குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, டாக்சி, சீருந்து, வேன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன், ஆலந்தூர் மெட்ரோ நிலையத்தில் இருந்து, வேளச்சேரிக்கு டெம்போ டிராவலர், 'ஏசி' வேன் வசதி, நேற்று முன்தினம் முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வேன், பரங்கிமலை மெட்ரோ நிலையத்தில் இருந்து, தில்லை கங்கா நகர் சுரங்கப்பாதை வழியாக, வேளச்சேரி செல்லும்; 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். நபருக்கு, 20 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுஉள்ளது.